நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென்று கேட்டிருந்தார். அதைப்போல, திரு. சிங்காரம் தனிப்பட்ட முறையிலே கொடுத்திருந்தார். இந்த *3* பேர்களுடைய கோரிக்கைகளும் ஒரு பொதுவான தன்மையையொட்டி ஒன்றாக இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து ஜப்தியை நிறுத்த வேண்டுமென்றுதான் அவர் கேட்டிருந்தார்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஜப்தி நடவடிக்கை இல்லையென்று சொன்னதனால், அந்தப் பதிலைச் சொல்ல வேண்டிய அவசியம் வந்தது. ஆக, ஒரு மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு சில வரன்முறைகள் உள்ளன. அங்கே நிலத்திலே, விவசாயத்திலே எவ்வளவு பெற்றிருக்கிறார்கள், மற்ற மற்ற துறைகளிலே எவ்வளவு வருவாய் இருக்கின்றது என்கின்ற அந்த அடிப்படையிலே அதை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்றால் அது வேறு துறை. அப்படி அறிவித்துவிட்ட பிறகு ஜப்தி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றால் பிறகு இந்தத் துறை அதைப்பற்றி யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவருக்கு ஒரு கேள்விதான். நான்தான் நீங்கள் கொடுத்தீர்கள் என்பதைச் சொல்லியிருக்கிறேனே.

3. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

***திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் *160*-வது, *161*-வது, *162*-வது, *163*-வது மற்றும் *164*-வது ஆகிய *5* அறிக்கைகளைக் குழுவின் சார்பாக சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கிறேன்.